இருந்தால் 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இடம், அரசு உண்டி, உறைவிடப் பள்ளிக்குச் சொந்தமானது. அந்த இடத்தில் 4.8 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. ஆகவே, அந்த இடத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

249—

புதிய கட்டடம்

***7667—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் நுழைவு அனுமதி பெறப்பட்டவுடன், புதிய கட்டடம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

2012 மே 10]

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடியில் வாழும் ஏழை விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க, மழை வெள்ளக் காலங்களில் மழை நீர் வீணாகக் கடலில் கலக்காமலும், கடல் நீர் உட்புகுந்து விவசாய நிலங்களைப் பாதிக்காமல் தடுக்கவும் ரூ.1,560 கோடி நிதியொதுக்கி, காவிரி டெல்டா மாவட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்த (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில், வேதாரண்யம் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளை வணங்கிச் சமர்ப்பிக்கிறேன், அம்மா.*

தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு, வேதாரண்யம் வட்டம், தேத்தாக்குடி ஊராட்சி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கி அருகில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் விரைவில் இந்த ஆண்டே கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த விற்பனைக் கூடத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு தேத்தாக்குடி தெற்கு ஊராட்சிக்குட்பட்ட வேதாரண்யம்-நாகப்பட்டினம் பிரதான சாலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு அருகில் புல எண் 251/1-ல் காலியாகவுள்ள இடத்தைத் தேர்வு செய்து, உரிய ஆவணங்களுடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முன் நுழைவு அனுமதி பெற்றிட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் நுழைவு அனுமதி பெறப்பட்டவுடன், புதிதாக கட்டடம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2012 மே 10

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

250—

மேல்நிலைப் பள்ளி

***39—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் புதிதாக மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். முதன்முதலாக, மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு விதிகளின்படி வழிவகையில்லை. இருப்பினும், புதிய தொடக்கப் பள்ளி தொடங்கப்படவேண்டுமெனில், அங்குள்ள மக்கள் தொகை, மாணவ, மாணவியர் எண்ணிக்கை, தற்போது அருகிலுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை, தூரம், இடவசதி மற்றும் தேவைகளைக் கருத்தில்கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு புதிய பள்ளி தொடங்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு